Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

அமர்வு வழக்கு எண்.114/2023

Depositions of : PW1
solemnly by S.Ramanujam, Translator

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : Kalaivani | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of January 2025

(எதிரிஆஜர்).

முதல் விசாரணை:-

எனது பெயர் கலைவாணி, எனது கணவர் பெயர் ஜெயவேல், நான் தற்பொழுது கதவு எண். 18, பிருந்தாவனம் நகர், ஆவடியில் குடியிருந்து வருகின்றேன். நான் பூந்தமல்லி, கரையான்சாவடியில் இருக்கின்ற மாவட்ட காசநோய் மருத்துவமையத்தில் மருத்துவ பணியாளராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 19.06.2021 சனிகிழமை அன்று காலை 7.45 மணிக்கு நான் டூட்டிக்கு வந்தேன். மருத்துவமனையின் பிரதான கேட்டை திறக்கும் பொழுது கேட்டிற்கு வெளியே தெற்கு பக்கம் ஒரு ஆண் மல்லாந்து படுத்துக்கிடந்தார். அவர் ரத்த வெள்ளத்தோடு படுத்து கிடந்தார். அவர்

மூச்சுபேச்சு இல்லாமல் கிடந்தார். என்னுடைய மேல் அதிகாரி லட்சுமிமுரளிக்கு தகவல் சொன்னேன். அதன் பிறகு நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் இது தான். அது அ.த.சா.ஆ.1. அதன் பிறகு போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் பார்த்ததை சொன்னேன். போலிசார் விசாரித்து வாக்கமூலம் பதிவு செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

சம்பவத்தன்று நான் காலை 7.30 மணிக்கு வேலைக்கு வந்தேன். எங்கள் மருத்துவமனைக்கு தெற்குபுறமாக ஒரு கேட்டும், மேற்குபுறமாக ஒரு கேட்டும், இரண்டு கேட்டுகள் உள்ளன. இரண்டு கேட்டுகளின் சாவியும் பொதுவாக ஒரு இடத்தில் வைத்திருப்போம். எப்பொழுதும் இரண்டு கேட்டுகளையுமே பயன்படுத்துவோம். சம்பவத்தன்று நான் முதலில் மேற்கு புறமாக உள்ள கேட்டை திறந்தேன். நான் சம்பவத்தை பார்த்த பொழுது மேல் அதிகாரி அங்கு இருந்தார்களா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நான் மேல் அதிகாரிக்கு போன் மூலமாக தகவல் சொன்னேன். நான் கேட்டை திறந்த பொழுது மேல் அதிகாரி அலுவலகத்தில் இல்லை என்றால் சரிதான். என்னுடைய மேல் அலுவலர் எப்பொழுது காவல் நிலையத்திற்கு போன் செய்து தகவல் சொன்னார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பூந்தமல்லி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னுடன் அருண் சார் வந்திருந்தார். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் அருண் சார் கையெழுத்திடவில்லை. நான் சொன்ன நேரம், சொன்ன இடம், சொன்ன வித்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்திற்கு சென்று காலை 10.00 மணிக்கு மேல் புகாரை கொடுத்தேன். நான் புகாரை

மருத்துவமனையிலேயே எழுதி கொண்டுசென்றேனா என்றால் இல்லை. நான் காவல் நிலையத்தில் வைத்து காவலர்கள் சொன்னபடி புகார் கொடுத்தேன். இந்த சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை :- இல்லை

**வாக்கு மூலம்**

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் (இ) பூந்தமல்லி**

**அமர்வு வழக்கு எண். 114 / 2023**

**சாட்சிகள்** : PW2

solemnly by S.Ramanujam, Translator

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | : Dr.லட்சுமி முரளி | **ஜாதி** | : |
| **தந்தை பெயர்** | : | **தொழில்** | : |
| **கிராமம்** | : | **சமயம்** | : |
| **தாலுக்கா** | : | **வயது** | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on 4th day January 2025

(எதிரி ஆஜர் படுத்தப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

நான் தமிழ்நாடு சுகாதார துறையில் காசநோய் இணை இயக்குநராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்று இருக்கின்றேன். இதற்கு முன்பாக கடந்த 2007 ல் இருந்து 2022 வரையிலும் பூந்தமல்லி கரையான்சாவடியில் இருக்கின்ற அரசு மாவட்ட காசநோய் மையத்தில் துறை இயக்குநராக பணிபுரிந்து வந்தேன். அ.சா.1 நான் பணிபுரிந்த மருத்துவமையத்தில்

மருத்துவமனை பணியாளராக பணிபுரிந்து வந்தார். கடந்த 19.06.2021 அன்று காலை 7.50 மணிக்கு அ.சா.1 எனது மொபைல் எண்ணுக்கு மிகவும் பதட்டமாக போன் செய்து மருத்துவமனையின் தெற்கு புறமாக உள்ள கேட்டுக்கு வெளியே ஒருவர் ரத்த வெள்ளத்தில் கிடக்கிறார் என்றும் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் என்னிடம் கூறினார். எனது வீடு அப்போது பேரம்பாக்கத்தில் இருந்தது. அதனால் நான் மருத்துவமனையில் பணிபுரியும் பூந்தமல்லியில் குடியிருக்கும் அருண் என்பவரை மொபைல் மூலமாக தொடர்பு கொண்டு சம்பவ இடத்திற்கு போய் பார்த்துவிட்டு போலிசுக்கு போக சொன்னேன். அதன் பிறகு அன்று காலை 9 மணிக்கு மருத்துவமனைக்கு வந்தேன். அதன் பிறகு போலிசார் வந்தார்கள். இறந்து கிடந்தவரை பார்த்து அவர் இறந்து தான் போய்விட்டார் என்று சொன்னார்கள். அவரது உடலை எடுத்து சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் சம்பவம் நடந்த காலக்கட்டத்தில் Deputy Director–ஆக பணிபுரிந்து அதன் பிறகு Joint Director ஆக சென்னையில் பணிபுரிந்தேன். என்னுடைய பணி நேரம் காலை 10 மணியில் இருந்து மாலை 5 மணி வரை. சம்பவத்தன்று காலை 9 மணிக்கு நான் பணிக்கு வந்தேன். நான் பேரம்பாக்கத்தில் இருக்கின்ற என்னுடைய வீட்டில் இருந்து மருத்துவமனைக்கு வர 45 நிமிட நேரம் ஆகும். அன்றைய தினம் காரில் வந்தேன். போக்குவரத்து காரணமாக என்னுடைய பயண நேரம் தாமதம் ஆகும் என்றால் சரி தான். **நான் போலிசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் அருணுக்கு போன் செய்த விவரத்தை சொல்லவில்லை என்று சொன்னால் சரி அல்ல.** நான்

மருத்துவமணைக்கு வந்தபோது கலைவாணி அங்கு இல்லை அவரை அருண் அழைத்து கொண்டு காவல் நிலையத்திற்கு சென்று இருந்தார். நான் மருத்துமணைக்கு வந்த பிறகு போலிசார் 10.30 மணி போல வந்தார்கள். நான் பணிக்கு வந்த பிறகு அங்கு கிடந்த உடலை மதியம் 2 மணி போல அங்கிருந்து எடுத்து சென்றார்கள். நான் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி அல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

அமர்வு வழக்கு எண்.114/2023

Depositions of : PW3
solemnly by S.Ramanujam, Translator

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : Mohan | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of January 2025.

(எதிரிஆஜர்).

முதல் விசாரணை:-

எனது பெயர் மோகன். எனது தகப்பனார் பெயர் தயாளன். நான் பூந்தமல்லியில் இருக்கின்ற மாவட்ட காசநோய் மருத்துவமனைமையத்தில் முதுநிலை மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகின்றேன். என்னுடைய வீடு சென்னீர்குப்பத்தில் உள்ளது. என்னுடன் பணிபுரிகின்ற அருண்குமார் என்பவர் காலை 8.00 மணிக்கு போன் செய்தார். மருத்துவமனையில் ஒருவர் இறந்து கிடக்கின்றார், வாங்க எனக்கு பயமாக இருக்கின்றது என்று சொன்னார். உடனே மருத்துவனைக்கு சென்றேன். பின்பு மருத்துவமனைக்கு சென்ற பொழுது தெற்குபக்கமாக உள்ள போர்டிகோவில் ஒருவர் ரத்தக்காயத்தோடு இறந்து கிடந்தார். அருண்குமார் போலிஸிற்கு தகவல்

சொல்லி போலிசார் அங்கு வந்தார்கள். போலிசார் சம்பவ இடத்தை பார்வை இட்டார்கள் அங்கு இரண்டு சாராய பாட்டில்கள் கிடந்தது. அது குவாட்டர் பாட்டில்கள். அவைகள் சா.பொ.1 வரிசைகள். (2 எண்ணிக்கையள்). அங்கு ரத்தகரையோடு ஒரு ஜோடி சேருப்புகள் இருந்து. அது சா.பொ.2 வரிசைகள் (2 எண்ணிக்கையள்). இறந்து கிடந்தவர் பு ளு கலர் ஜீன்ஸ் போட்டிருந்தார். சிமெண்ட் கலர் பணியன் போட்டிருந்தார். அந்த ஜீன்ஸ் சா.பொ.3. பணியன் சா.பொ.4. போலிசார் சம்பவ இடத்தை சுமார் ஒரு மணி நேரம் பார்வையிட்டார்கள். பக்கத்தில் ரத்தக்கரையோடு ஒரு கல் இருந்தது. அந்த கல் இது தான். அது கல் சா.பொ.5. போலிசார் பக்கத்தில் இருக்கின்ற பள்ளியின் காம்பவுன்ட் ஓரமாக இறந்த நபரின் ஆதார் அட்டையை எடுத்தார்கள். அந்த ஆதார் அட்டை இது தான் சா. பொ.6. போலிசார் என் முன்னால் தயார் செய்த பார்வை மகசர் இது தான். அது அ.த.சா.ஆ.2. கல், ஒரு ஜோடி செருப்பகள் மற்றும் சாராய பாட்டில்கள் கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.3. ஆதார் அட்டையை கைப்பற்றிதற்கான கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.4. அதன் பிறகு போலிசார் இறந்த நபரை பிரேத பரிசோனைக்கு அனுப்பி வைத்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்துக்கொண்டு வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

எனக்கு அருண் தான் தகவல் கொடுத்தார். மருத்துவமனையில் ஒருவர் இறந்து கிடக்கின்றார் நான் தனியாக இருக்கின்றேன் என்றும் நீங்கள் வா என்று சொன்னார். அருண் தகவல் கொடுக்கும் பொழுது காலை 8.00 மணியிருக்கும். நான் 8.05 மணிக்கு மருத்துவமனைக்கு வந்தேன். நான் என்னுடைய வீட்டில் இருந்து வர 5 நிமிடம் ஆகும். இன்று இந்நீதிமன்றத்தில் நான் காண்பித்துள்ள கல்லை போல பொதுவாக

கிடைக்கும் என்றால் சரிதான். போலிசார் சம்பவ இடம் வரும் பொழுது 8.30 அல்லது 8.45 மணியிருக்கும். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் அங்கேயே போலிசார் தயார் செய்தார்கள். அங்கேயே கையெழுத்து போட்டேன். பிரேதத்தை என்தனை மணிக்கு போலிசார் எடுத்து சென்றார்கள் என்று எனக்குத் தெரியாது. நான் சொன்ன நேரம், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் போலிசார் எந்த ஒரு பார்வை மகசரையும் தாயர் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரம், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் போலிசார் எந்த ஒரு கைப்பற்றுதல் மகசரையும் தாயர் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரம், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் போலிசார் எந்த ஒரு பொருளையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை :- இல்லை